தாரமங்கலத்தில் சுற்றுலா வாரியம் மூலம் தங்கும் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண் 712—திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் சுற்றுலா வாரியத்தின் மூலமாக தங்கும் விடுதி கட்ட அரசிடம் திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்போது இல்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படி உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். தாரமங்கலம் சிற்பக்கலைக்கு பெயர் பெற்ற இடம். மாண்புமிகு அமைச்சர் அவர்களே கண்டு களித்திருக்கிறார்கள். தினசரி நூற்றுக்கணக்கான பேர்கள் சிற்பக்கலையைப் பார்வையிடுகிற நிலை இருக்கிறது. ஆகவே, உடனடியாக சுற்றுலா வாரியம் மூலமோ, அல்லது அறநிலையத்துறை மூலமாகவோ தங்கும் விடுதியை கட்ட முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–10]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் ஆலயத்திலே மிகச் சிறந்த சிற்பங்கள் இருப்பது உண்மை. அந்தச் சிற்பங்கள் அந்த ஆலயத்திலே இருக்கின்றன என்பதுகூட தமிழகத்திற்குள்ளே ஏன் குறிப்பாக சேலம் மாவட்டத்திற்குள்ளே கூட பரவவில்லை என்பது என்னுடைய கருத்து. அதைப் பரப்பி, சிற்பக் கலையைப் பற்றிய சிறப்பை எடுத்துச் சொல்லி மக்களை அங்கே வரவழைத்ததற்குப் பிறகு அந்த முயற்சிகளை அறநிலையத் துறையோ அல்லது சுற்றுலாத் துறையோ மேற்கொள்ள இயலும்.

கிருஷ்ணகிரியில் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம்.

*வினா எண். 713—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் பயணிகள் (சுற்றுலா) மாளிகை (Tourist Bungalow) கட்டும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்பணி எப்போது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) : கிருஷ்ணகிரியில் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் ஒன்றும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், அங்கு ஒரு சாலை ஓரத் தங்கும் விடுதி (Motel) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட்டு வருகிறது.